செ.வெ.எண்:38 நாள்: 22.01.2018

**புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அரசு தொழில் பயிற்சி நிலையத்திற்கு (I.T.I)**

**புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு முதற்கட்டமாக ரூ.1 கோடி ஒதுக்கீடு.**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர்**

**டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் கடந்த 2015-16ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் விதி 110-ன் கீழ் ரூ.25.15 கோடி மதிப்பில் தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை உட்பட 5 புதிய அரசு தொழில் பயிற்சி நிலையங்கள் (I.T.I) அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். இதனைத் தொடர்ந்து 5 அரசு தொழில் பயிற்சி நிலையங்களும் தொடங்கப்பட்டு மாணவர் சேர்க்கை நடைபெற்று தற்போது இயங்கி வருகின்றன. இந்த 5 அரசு தொழில் பயிற்சி நிலையங்களுக்கும் புதியதாக கட்டிடங்கள் அமைக்க இந்த நிதியாண்டில் (2017-18) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை உட்பட தலா ரூ.1 கோடி என மொத்தம் ரூ.5.03 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**இது தொடர்பாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில்,**

**மாண்புமிகு அம்மா** அவர்களின் அரசு கல்வித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழகத்தில் அனைவருக்கும் கல்வி என்ற நிலையை உருவாக்க வழிவகை செய்யப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அரசு தொழில் பயிற்சி நிலையத்திற்கு புதியதாக கட்டிடங்கள் கட்டுவதற்கு முதற்கட்டமாக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், **மாணவ மாணவியரின் நலன் கருதி அனைத்து கட்டிடங்கள் இந்த ஆண்டே முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு முழு அளவில் செயல்படும்** என்றார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**